# DEPOSITION OF WITNESS
## ( Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE CHEYYUR

**Calender :**
**Miscellaneous : CC Case No.33/2022**
**Sessions :**
**Deposition of Witness for : PW 1, LW1**

| | |
|---|---|
| Name | : திரு.ஞானவேல் |
| Father's/Husband Name | : திரு.கலியன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**Solemnly affirmed in accordance with the provision of oaths Act 1969 on the 14th day of August 2024.**

(எதிரி தற்போது நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளார்)

முதல் விசாரணை,

1. நான் தற்போது கூவாடு கிராமத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்த கலியன் எனது அப்பா ஆவார். காயம்பட்ட ரங்கநாதன் மற்றும் காத்தாயி ஆகியோர்களை தெரியும்.

2. கடந்த 1.5.2022 ம் தேதி சரக்கு வாகனத்தில் எனது அப்பா மற்றும் ரங்கநாதன் மற்றும் காத்தாயி ஆகியோர்கள் சரக்கு வாகனத்தில் பையம்பாக்கம் கிராமத்திலிருந்து பாலூர் கிராமத்திற்கு சென்று கொண்டிருந்தபோது கூட்ரோடில் நாங்கள் சென்ற வண்டி சாய்ந்து விபத்து ஏற்பட்டது. அதில் மூவருக்கும் காயம் ஏற்பட்டது. அவர்களை செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதாக தகவலின் பேரில் நான் மருத்துவமனை சென்று பார்த்தேன். எனது அப்பாவிற்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. அவர் சிகிச்சை பலன் இல்லாமல் 13.5.2022ம் தேதி இறந்துவிட்டார்.

3. இது குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்த புகார் ஆகும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>,**

விபத்து குறித்து தகவல் கேள்விபட்டு மருத்துவமனை சென்று பார்த்துவிட்டு பின்னர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். புகார் கொடுத்த பிறகு போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான்.

(இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது)

மறுவிசாரணை..இல்லை.

Signature of Witness

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

Sd/-Tmt.N.Preethi, 14.08.2024

District Munsif Cum Judicial Magistrate
Cheyyur

**DEPOSITION OF WITNESS**
**( Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE CHEYYUR**

**Calender :**
**Miscellaneous : CC Case No.33/2022**
**Sessions :**
**Deposition of Witness for : PW 2, LW2**

| | |
|---|---|
| Name | : திருமதி.பழனியம்மாள் |
| Father's/Husband Name | : திரு.கலியன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**Solemnly affirmed in accordance with the provision of oaths Act 1969 on the 14th day of August 2024.**

(எதிரி தற்போது நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளார்)

முதல் விசாரணை,

1. நான் தற்போது கூவாடு கிராமத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்த கலியன் எனது கணவர் ஆவார். காயம்பட்ட ரங்கநாதன் மற்றும் காத்தாயி ஆகியோர்களை தெரியும்.

2. சுமார் இரண்டு வருடத்திற்கு முன்பாக ஒரு வாகனத்தில் எனது கணவர் மற்றும் ரங்கநாதன் மற்றும் காத்தாயி ஆகியோர்கள் சென்றபோது விபத்து ஏற்பட்டதாகவும், அதில் அவர்களுக்கு காயம் ஏற்பட்டதாக கேள்விபட்டு மருத்துவமனை சென்று பார்த்தேன். எனது கணவருக்கு தலையில் காயம் ஏற்பட்டது. எனது கணவர் சிகிச்சை பலன் இல்லாமல் இறந்துவிட்டார். . போலிசார் என்னை விசாரணை விசாரிக்கவில்லை

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>,** இல்லை.

(சாட்சிக்கு எழுத படிக்க தெரியாது என்பதால் அவருக்கு படித்து காண்பிக்கப்பட்டு பின்னர் கையொப்பம் மட்டும் பெறப்பட்டது.

(இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது)

மறுவிசாரணை..இல்லை.

Signature of Witness

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

Sd/-Tmt.N.Preethi, 14.08.2024

District Munsif Cum Judicial Magistrate
Cheyyur.

**DEPOSITION OF WITNESS**
**( Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE CHEYYUR**

**Calender :**
**Miscellaneous : CC Case No.33/2022**
**Sessions :**
**Deposition of Witness for : PW 3, LW3**

| | |
|---|---|
| Name | : திருமதி.காத்தாயி |
| Father's/Husband Name | : திரு. |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**Solemnly affirmed in accordance with the provision of oaths Act 1969 on the 14th day of August 2024.**

(எதிரி தற்போது நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளார்)

முதல் விசாரணை,

1. நான் தற்போது கூவாடு கிராமத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்த கலியன் என்பவரை தெரியும். காயம்பட்ட ரங்கநாதனை தெரியும்.

2. சுமார் 2 வருடத்திற்கு முன்பு கூலி வேலைக்காக நாங்கள் குட்டி யானையில் சென்றபோது வாகனம் கவிழ்ந்து விபத்து ஏற்பட்டது. அதில் எனக்கு தலை மற்றும் கையில் காயம் ஏற்பட்டது. மற்றவர்களுக்கும் காயம் ஏற்பட்டது. நாங்கள் மருத்துவமனை சென்றோம். கலியன் சிகிச்சை பலன் இல்லாமல் இறந்துவிட்டார். போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>,**

நான் டாடா ஏர்ஸ் வாகனத்தில் பின்னால் அமர்ந்து சென்றதால் எவ்வாறு விபத்து ஏற்பட்டது என்று எனக்கு சரியாக தெரியாது என்றால் சரிதான். வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

(சாட்சிக்கு எழுத படிக்க தெரியாது என்பதால் அவருக்கு படித்து காண்பிக்கப்பட்டு பின்னர் கையொப்பம் மட்டும் பெறப்பட்டது).

(இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது)

மறுவிசாரணை..இல்லை.

Signature of Witness

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

Sd/-Tmt.N.Preethi, 14.08.2024

District Munsif Cum Judicial Magistrate
Cheyyur